*E-ISSN 2456-5148*
Online: www.ngmtamil.in

**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Puthiya Thalaimurai in the History of Journalism

**Dr.G.Elizabethrani***,
Assistant Professor in Tamil, Holy Cross College (Autonomous), Tiruchirappalli-620 002
*Correspondence: elizabethrani16@gmail.com

**Article Info**
Received on 22-April-2026, Revised on 22-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Countless events are happening across the globe every single minute. Journalism is the art of capturing these events and presenting them to the world. Even in an era where computerized communication devices dominate information exchange, the contribution of journals and magazines remains uniquely significant. The role of journalism in social development, manifested in written and printed forms, serves as a vital record for the future. Journals are capable of performing various general and specialized functions. Among the many publications that serve as archives of news collection, Puthiya Thalaimurai magazine holds a noteworthy and distinct place. This article discusses how Puthiya Thalaimurai magazines present essential ideas with social awareness, demonstrating a deep-seated concern for the younger generation.

***KEYWORDS:*** *Journalism history, Puthiya Thalaimurai, Abstract, Media studies, Information exchange, Social development, Print media, News archives, Youth empowerment, Social awareness, Communication technology, Tamil journalism.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# இதழியல் வரலாற்றில் புதியதலைமுறை

***முனைவர் ஞா. எலிசபெத் ராணி பி.ஏ., எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி., நெட்.**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக்கல்லூரி
திருச்சிராப்பள்ளி 620 002

**ஆய்வுச்சுருக்கம்**

நிமிடங்கள் தோறும் உலகில் எண்ணற்ற நிகழ்வுகள் நிகழ்த்த வண்ணம் உள்ளன. அந்நிகழ்வுகளை உலகமெங்கும் படம்பிடித்துக்காட்டும் கலையாக நிகழ்வது இதழ்கள் ஆகும். தகவல் பரிமாற்றத்திற்குக் கணினி மயமாக்கப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் இயங்கினாலும், இதழ்களின் பங்களிப்பு தனிச்சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. சமுதாய வளர்ச்சிக்கு உதவும் இதழ்களின் பணி, எழுத்து வடிவிலும், அச்சு வடிவிலும் உருபெற்று எதிர்காலத்திற்கு ஆதாரமாகத் திகழக்கூடியது.

இதழ்கள் பல வகையான பொதுப்பணிகளையும், சிறப்புப் பணிகளையும் ஆற்றவல்லது. செய்திச் சேகரிப்பு கோப்புகளாக வெளிவருவதில் பல இதழ்கள் இடம்பெறுகின்றன. அப்பட்டியலில் புதிய தலைமுறை இதழுக்குக் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பிடமுண்டு. மக்களுக்குத் தேவையான கருத்துக்களை விழிப்புணர்வுடன் புதிய தலைமுறை இதழ்கள் இளைய சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டதாக அமைகின்றன என்பதை இக்கட்டுரை கூறுகிறது.

**முன்னுரை**

மனிதன் கூடிவாழத் தொடங்கிய கருத்துகளைப் காலத்தில் ஏற்பட்டது. பேச்சுமொழி பரிமாறக்கொள்ள வேண்டிய தேவை உருவாவதற்கு முன்பே மனிதன் செய்கைகளின் வழி செய்திகளைப் பரிமாறிக் கொண்டான். பறையறிவித்தும், தீயம்புகளை வானத்தில் எறிந்தும், புகையெழுப்பியும், மணியடித்தும், ஓரிடத்தில் நடக்கும் நிகழ்வுகளைச் சுற்றுவட்டாரத்து மக்களுக்கு அறிவிக்கும் பழக்கம் இருந்தது. பேச்சு மொழி வளர்ந்த காலங்களில் வாய்வழியாகச் செய்திகளைக் கேட்டறிந்து, மற்றவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. எழுத்து மொழி வளர்ந்தபின்பு எழுத்தின் மூலமாகவும், ஓவியங்களின் வாயிலாகவும் புறாக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டி அனுப்பியும் செய்திகள் பரப்பப்பட்டன.

புதிய தலை முறைகளில் செய்திகளை விரைவாகவும், விளக்கமாகவும் கூறி மக்களை மகிழ்வித்தலால் இதழியல் துறை உலகமெங்கும் பரவத் தொடங்கியது. மனித நாகரிக வளர்ச்சியில் தகவல் பரிமாற்றத்தின் முக்கியத்துவத்தையும், இதழியல் துறையின் தோற்றம் மற்றும் அதன் வளர்ச்சி நிலைகள், **'புதிய தலைமுறை'** இதழின் கட்டமைப்பு, வடிவமைப்பு மற்றும் அதன் இதழியல் நுட்பங்கள் மற்றும் தெளிவான அச்சுமுறை இருந்துள்ள முறையினைக் காணலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த இதழியலின் தோற்றம் குறித்தும், அதன் வளர்ச்சிநிலைகள் குறித்தும் மற்றும் இதழியல் வரலாற்றில் புதிய தலைமுறை இதழ் பெறுமிடம் குறித்தும், அதன் கட்டமைப்பு குறித்தும் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்:** Journal – இதழ் / பத்திரிகை, Editorial – தலையங்கம், Cover – மேலட்டை, Front Cover – முன்புற அட்டை, Back Cover – பின்புற அட்டை, Advertisement – விளம்பரம், Content / Table of Contents – பொருளடக்கம் / உள்ளடக்கம், Logo – இலச்சினை, News – செய்திகள், Newspaper – செய்தித்தாள் / ஏடு, Weekly – வார இதழ், Journalism – இதழியல், Mass Communication – மக்கள் தொடர்புச் சாதனங்கள், Font Size – எழுத்து அளவு, Sliding bed – நழுவிப் போகும் தட்டு, Jumpar – காகிதப் பொருத்தி, Frosket – காகிதம் பற்றி, Single Fold – ஒற்றை மடிப்பு முறை, Double Crown Size – உட்பக்கத்தாள் மடிப்பு முறை,Page Layout / Design – பக்க வடிவமைப்பு, Intermissions / Pauses – இடைநிறுத்தங்கள் (செய்திகளுக்கு இடையே வரும் விளம்பரம் அல்லது பெட்டிச் செய்திகள்), Fillers – இடநிரப்பிகள் (வெற்றிடங்களை நிரப்பப் பயன்படும் செய்திகள்),Printing Press – அச்சுப்பொறி, Steam Press – நீராவி அச்சுப்பொறி, Drafting / Composition – அச்சுக்கோப்பு, Paragraph Styles – பத்தி அமைப்புகள் (எ.கா: செய்திச் சுருக்கப் பத்தி, வருணனைப் பத்தி)

**இதழியல் விளக்கம்**

**Journal** என்ற ஆங்கிலச் சொல்லின் வேர்ச்சொல் **"dirnulis"** என்ற இலத்தீன் சொல்லாகும். **Dirnulis** என்றால் **'ஒரு நாளின்' (of the day)** என்று பொருளாகும். இச்சொல்லே பின்னாட்களில் Journal என்று மாற்றம் பெற்றது. இது இடைக்கால பிரெஞ்சு மொழியில் 'நாள்தோறும்' என்ற பொருளில் வழங்கப்பட்டது. இதழ்கள் நாளிகை மற்றும் பத்திரிகை என்ற பெயர்களாலும் வழங்கப்படுகின்றன. உலகின் சக்தி வாய்ந்த துறையாக இது விளங்குகின்றது. இதனை,

**"ஏற்றமுறச் செய்வதுவும் மாற்றமுற**
**வைப்பதும் ஏடேயாகும்"** [1]

என்ற பாரதிதாசனின் வரிகளால் அறியமுடிகின்றது.

**இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும்**

எதனையும் காரணக்காரியம் கொண்டு ஆராயக் கூடிய இன்றைய உலகம் பகுத்தறிவு உலகம் அறிவியல் கண்ணோட்டத்தில் வளர்ந்து வரும் துறைகளுள் இதழியலும் ஒன்றாகும். மேலை நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாக இத்துறை இன்று வியக்கத்தக்க முறையில் இன்னும் வளர்ந்து வருகின்றது. முதன்முதலில் 1660இல் ஜெர்மனியில் இருந்து **'ரிலேஷன்' (Relation)** என்ற செய்தித்தாள் வெளிவந்தது.

படிப்படியாகப் பிறநாடுகளில் இதழ்கள் வெளிவரத் தொடங்கின. ஐரோப்பியர்களின் வருகையால் இந்தியாவில் விளைந்த நன்மைகளுள் ஒன்று இதழ்களின் தோற்றமாகும். ஒவ்வொரு இந்திய சமுதாயத்தின் எல்லா தரப்பினையும் தொடர்பு கொள்வதற்காக அவர்கள் இந்திய மொழிகளைப் பயின்றனர். தங்களது மத போதனைகளை அம்மொழியில் நூலாக வெளியிட்டனர்.

Copyright © Author(s), 

1577ஆம் ஆண்டு கோவாவில் போர்த்துகீசியரால் **"தம்பிரான் வணக்கம்"** என்ற முதல் தமிழ்நூல் அச்சானது. இதுவே இந்தியாவின் முதல் அச்சு நூலாகும். கி.பி. 1780ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் நாள் இந்தியாவில் முதல் செய்தித்தாளை **"ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி"** என்பவர் கல்கத்தாவில் இருந்து வெளியிட்டார். அதன் பெயர் **"பெங்கால் கெசட் (அ) கல்கத்தா பொது விளம்பரத்தாள்"** என்பதாகும். **"ஹிக்கி"** இந்திய இதழியலின் தந்தை என்று போற்றப்படுகிறார். ஹிக்கியின் இதழ் 12.8 என்ற அளவில் இரு தாள்களைக் கொண்ட வார இதழாகும்.

தமிழ்நாட்டின் முதல் இதழ் என்ற சிறப்பைப் பெற்றது **'மெட்ராஸ் கூரியர்'** என்பதாகும். இதனை,

> **"சென்னையில் முதல் செய்தித்தாள் ரிச்சர்டு ஜான்சன் என்னும் அச்சகர்**
> **மெட்ராஸ் கூரியர் என்னும் செய்தி இதழைக் கி.பி. 1785ஆம் ஆண்டு**
> **அக்டோபர் 12இல் தொடங்கினார்" [2]**

எனும் வரிகளால் அறியமுடிகின்றது.

முதன்முதலில் சென்னையில் **"ஹியூக் பாய்டு"** ஆசிரியரால் **"மெட்ராஸ் கெஜட்", "கவர்ன்மென்ட் கெஜட்", "மெட்ராஸ் கூரியர்"** என்னும் இதழை **"ரிச்சர்ட் ஜான்சன்"** என்பவர் தொடங்கினார். பின்பு அரசுடன் கருத்து வேறுபாடு கொண்டு **"ஹாரகாரு"** என்ற இதழை **'இராபர்ட் வில்லியம்'** என்பவர் தொடங்கினார். இவ்விதழ் மெட்ராஸ் கூரியருக்கு எதிரானதாகச் செயல்பட்டது.

> **"1802இல் இலங்கை அரசின் கெசட்டில் தமிழ்ப் பகுதியாக**
> **வெளிவந்த அரசாங்க வர்த்தமானியே தமிழின் முதன் இதழாகும்.**
> **இதனைத் தொடர்ந்து பல்வேறு சமய இதழ்கள் வெளிவந்தன " [3]**

என்ற அ. மா. சாமியின் வரிகள் வழி, தமிழில் இதழியலின் தோற்றம் குறித்து அறியமுடிகின்றது.

**வளர்ச்சி**

சமுதாயம் என்பது காலந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றது. சமுதாயம் மாறவும், வளரவும் உறுதுணையாக அமைவன மக்கள் தொடர்புச் சாதனங்கள். அவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக **வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், பத்திரிகை** போன்றவை விளங்குகின்றன. இவற்றில் வானொலியும், தொலைக்காட்சியும் பாமர மக்களுக்கு எளிதில் கிடைத்தற்கரியன. ஆனால் அன்றாட நிகழ்ச்சிகளை அறிய உதவுவதும் குறைந்த செலவில் அமைவதும் பத்திரிகைகளே ஆகும். ஆகவே சமுதாயத்தின் மாற்றத்திலும், வளர்ச்சியிலும் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கு உண்டு.

இருபதாம் நூற்றாண்டில் செய்தித்துறைப் பிற துறைகளை விட நன்கு வளர்ச்சியடைந்துவிட்டது என்பதனை,

> **"இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரிய சாதனங்கள் மண்ணில் பிறந்த**
> **மனிதன்விண்ணில் பறந்ததும் வெண்ணிலவில் இறங்கி உலவியதும் ஆகும்.**

Copyright © Author(s), 

**இதற்கு முதல் வழி வகுத்தது செய்தித் தொடர்பே"** [4]

என்ற அ.மா.சாமியின் வரிகள் வழி அறியமுடிகின்றது.

தொழில் வளர்ச்சிக்குச் செய்தித் தொடர்பே மிக இன்றியமையாததாகும். என்பதனை,

**"ஜப்பானிலும் அமெரிக்காவிலும் இன்று முன்னணித் தொழிலாய்த்**
**திகழ்வது செய்தித் தொடர்பு தான் "** [5]

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

இதழியிலின் அச்சுப்பொறிகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது கண்டுபிடிப்புகள் ஆகும். **ஜெர்மனியில் ஜான் கூடன்பர்க்** என்பவரால் 1430இல் முதன்முதலில் மர அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்து 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செம்பினால் அச்சுப்பொறி செய்யப்பட்டது. இதனை

**"அச்சுப்பொறியில் நழுவிப் போகும் தட்டும் (Slidding bed),**
**அச்சடிப்பதற்கான காகிதப் பொருத்தியும் (Jumpar), காகிதம் பற்றியும்**
**(Frosket), மரச்சட்டமும் அமைக்கப்பட்டு மாறுதல் செய்யப்பட்டன"** [6]

என்ற வரிகள் வழி அறியமுடிகின்றது. 19ஆம் நூற்றாண்டு அச்சுப்பொறி வளர்ச்சியினை,

**"19ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் நீராவி அச்சுப் பொறியும்**
**அமைக்கப்பட்டதன் காரணமாக அச்சிடும் முறையில் பொறியும்,**
**காகித உற்பத்திப் பெரும் மாறுதல் ஏற்பட்டது. ஆனால் மற்றோர்**
**அரை நூற்றாண்டு கையால் அச்சுக் கோர்ப்பது என்ற நிலையிலிருந்து**
**இயந்திரத்தால் அச்சிடுவது என்று நிலை வளரும் வரை அம்மாறுதலின்**
**பலன் பொறுத்திருந்தே அனுபவிக்க வேண்டியிருந்தது. இதனால்**
**19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியை அச்சுப்பொறியின் காலம்"** [7]

எனும் முத்துராசனின் வரிகள் வாயிலாக அறியமுடிகின்றது.

தமிழில் **ஜி. சு. ஐயர்** என்பவரால் 1878இல் **"தி இந்து"** என்ற ஆங்கில நாளிதழ் தொடங்கப்பட்டது. பின்பு தாய்மொழியின் செய்திகளைத் தர வேண்டுமென்று எண்ணித் தமிழில் 1882இல் **"சுதேசமித்திரன்"** என்ற இதழ் தொடங்கப்பட்டது. பின்பு **"சக்கரவர்த்தினி, கர்மயோகினி, இந்தியா"** போன்ற இதழ்களும், இதனைத் தொடர்ந்து, **சுதந்திரச் சங்கு, தேசபக்தன், நவசக்தி** போன்ற இதழ்களும் தோன்றி விடுதலைக்கும், தமிழுக்கும் பெரும் தொண்டு செய்தன. பின்னர் **"தினமலர், தினத்தந்தி, தினமணி, மாலை முரசு, மாலை மலர், மக்கள் குரல், தினகரன், தினபூமி, முரசொலி"** முதலிய நாளிதழ்கள் தோன்றின.

**புதிய தலைமுறை இதழின் தோற்றமும் வளர்ச்சியும்**

இன்றைய இதழியல் வளர்ச்சியில் எண்ணில் அடங்கா வண்ணம் பல்வேறு பெயர்களில் இதழ்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவற்றில் புதிய தலைமுறை இதழ் தனக்கான ஒரு தனிச்சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நாள் புதிய

தலைமுறை இதழ் சமூக விழிப்புணர்வு இதழாகத் தொடங்கப்பட்டது. வார இதழாக மாதம் நான்கு முறை வெளியிடப்பட்டது.

**புதிய தலைமுறை இதழின் கட்டமைப்பும் உள்ளடக்கமும்**

1. கட்டமைப்பு
2. கட்டமைப்புக் கொள்கை
    1. தாள், அட்டையின் அமைப்பு

1. தாளின் தரம்
2. தாளின் அமைப்பு
3. தாளின் வண்ணம்
4. அட்டை

    அட்டைத்தாள்

    1. இதழின் பெயர்
    2. தலையங்கம்

3. இலச்சினை
4. ஆண்டு, மாதம், நாள்
5. அட்டைப் படம்
    2. அட்டையில் இடம்பெறும் செய்திகள்
    3. அட்டைப் படத்திற்கும் உட் செய்திக்குமான தொடர்பு

2. உள்ளடக்க அமைப்பு
    - உள்ளடக்கம்
    - அச்செழுத்துக்கள்
    - அச்சாக்கம்
    - அச்சு வகை
    - பத்தி அமைப்பு
    - பக்க வடிவமைப்பு
    - இடைநிறுத்தங்கள்
    - இடநிரப்பிகள்
    - விளம்பரம்

**கட்டமைப்புக் கொள்கை**

ஒவ்வொரு இதழும் செய்திகளைக் கட்டமைப்பதில் வெவ்வேறு கொள்கையினை வரையறுத்துக் கொள்கின்றது. அட்டையைத் தேர்ந்தெடுத்தல், அட்டையில் இடம்பெறும் செய்திகள், தாளின் தரம், அமைப்பு, வண்ணம், எழுத்துருக்கள், பத்தி வடிவமைப்பு போன்ற உட்கூறுகள் அமைப்பதில் கவனம் செலுத்துதல் ஆகியவை கட்டமைப்புக் கூறுகளாக அமைகின்றன. அவ்வகையில் புதிய தலைமுறை இதழின் கூறுகளாகத் தாள், அட்டை அமைப்பு, உள்ளடக்க அமைப்பு என இரண்டாகப் பகுக்கலாம்.

**தாளின் தரம்**

இதழில் பயன்படுத்தப்படும் தாள்கள் எந்த வகையைச் சார்ந்தது என்பதைக் கூறுவதே தாளின் தரமாகும். புதிய தலைமுறை இதழ் ஒரே வகையான நிறமாக அல்லாமல் பல நிறங்களைப் பயன்படுத்துகின்றன. இதனைத் தனித்தாள் வகை என்பர். மேலும் தாள்கள் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. இது இதழில் வெளியாகும் படங்களை அழகாகவும், தெளிவாகவும் காட்டுவனவாக அமைகின்றன.

**தாளின் அமைப்பு**

தாளின் அளவு, மடிப்புமுறை இவற்றை விளக்குவது தாளின் அமைப்பு ஆகும். அட்டைத்தாளின் அமைப்பு 26.5x19 செ.மீ. அளவிலானது. அட்டையின் மடிப்பு (Single Fold) முறையிலும், உட்பக்கத்தாள் மடிப்பு முறையிலும் (Doble Crown Size) அமைந்துள்ளது.

**தாளின் வண்ணம்**

புதிய தலைமுறை அட்டையானது பல்வேறு வண்ணங்களில் அமைந்துள்ளது. உட்கூறு வெண்மை நிறத்தை அடிப்படையாகக் கொண்டு அதில் பல்வேறு நிறங்களில் படங்களுடன் செய்திகளும் அச்சிடப்படுகின்றன. பல்வேறு நிறங்களையும் இன்றைய கணினி வசதி மூலம் பெறப்பட்டு அச்சிடப்படுகின்றன. பொதுவாகச் **சிவப்பு, கருஞ்சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளைப்** போன்ற நிறங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் மனதை ஈர்க்கும் வண்ணமாக, புதுமையான வார இதழ்களில் ஒன்றாகப் புதிய தலைமுறை இதழ் திகழ்கின்றது.

**அட்டையின் அமைப்பு**

இதழின் முன்புறத்தின் மேல் பக்கம் அமைந்திருக்கும் தாள் 'அட்டை' எனப்படும். இதனை, 'மேலட்டை' (Cover) என்பர். இதழ்களில் உருவாக்கப்படும் அட்டையானது இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு இதழும் தனக்கென்று சிறப்பான ஒரு வடிவநிலையைக் கொண்டிருக்கின்றது. இதழ்களுக்கு வடிவமைக்கப்படும் அட்டையின் சிறப்பினை.

**"பெரும்பாலான மேலுறைகள் நூற்பெயரும் ஆசிரியர்**
**பெயரும் பொருத்தமான படமும் கொண்டுள்ளன"** [8]

என்ற வரிகள் வழி அறியமுடிகின்றது. அட்டைத்தாளில் இதழின் பெயர். தலையங்கம், இலச்சினை, ஆண்டு, மாதம், நாள், அட்டைப்படம் போன்றவை இடம்பெறுகின்றன. அட்டையானது,

1) முன்புற அட்டை
2) பின்புற அட்டை
3) உள்ளடக்கம்

என மூன்று பிரிவுகளாக இதழ் அமைகின்றன.

**முன்புற அட்டை**

இதழின் முன்புற அட்டையானது வண்ண மயமாகவும், அனைவரையும் கவரும் முறையிலும் அமைந்துள்ளது.

**"அட்டைப் படத்தைக் கவர்ச்சியாகவும் அழகாகவும் அனைத்து தர மக்களின் கண்ணையும் கவர்ந்து ஈர்க்கும் வகையில் வெளியிடுகின்றனர்" [9]**

**பின்புற அட்டை**

**"புதியதலைமுறை"** இதழ் அட்டையின் பின்புறத்தில் விளம்பரங்கள் பெரிதும் இடம் பெறுகின்றன. மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடும், விளம்பர நோக்கோடும் வெளியிடப்படுகின்றன.

**அட்டையில் இடம்பெறும் செய்திகள்**

இதழின் பெயரை அடுத்து முக்கியமானதாக மக்கள் மனதைக் கவரும் வண்ணம் அமைவது தலையங்கம் ஆகும். அட்டைப் படத்தை அடுத்து இதழின் உள்ளடக்கச் செய்திகளும், குறிப்புகளும் வாசகரை இதழின் உள்ளே இழுத்துச் செல்கின்றது. உள்ளடக்கச் செய்திகளின் சாரமாகத் தகவல்கள் அமைவதை.

**"பொருளடக்கம் என்ற தனிப்பகுதி அமைத்து அச்சு,
இடப்பரப்பு போன்றவை வீணாவது தடுக்கப்படுகிறது" [10]**

என்பதைப் பழ. முத்தப்பனின் வரிகள் மூலம் அறியமுடிகின்றது.

**அட்டைப்படத்திற்கும் உட்செய்திக்குமான தொடர்பு**

அட்டையில் இடம் பெற்றுள்ள படங்கள் அனைத்தும் உள்ளேயும் இடம்பெறுகின்றன. இது அட்டைப் படத்தின் கூறுகளை உள்ளே தெளிவாகப் புரிய வைக்கும் வகையில் அமைகின்றன .

**உள்ளடக்க அமைப்பு**

உள்ளடக்கம். கூறுகளின் வைப்புமுறை, அச்சு எழுத்துக்கள் முதல் விளம்பரங்கள் வரை உள்ளடக்க அமைப்பில் இடம்பெறுபவை ஆகும்.

**உள்ளடக்கங்கள்**

1. **அச்சமைப்பு**

அச்சமைப்பு என்பது ஒரு இதழின் இன்றியமையாத தகவல்கள் இடம் பெறும் பகுதியாகும். அச்சமைப்பில் அச்சாக்கம், அச்சுவகை, அச்சுக்கோப்பு பற்றிய தகவல்கள் இடம்பெறுகின்றன.

2. **அச்சு எழுத்துக்கள்**

புதிய தலைமுறை தன் எழுத்துக்களை நவீன கணினி முறையிலேயே அச்சு செய்து வெளியிடுகின்றது. புதிய தலைமுறை இதழில் உள்ளே வரும் செய்திகள் **10.5 (Font Size)** எழுத்து அளவில் தட்டச்சு செய்யப்படுகின்றது.

3. **அச்சாக்கம்**

அச்சு செய்து இதழைப் பதிப்பிக்கும் முறையே **'அச்சாக்கம்'** எனப்படுகிறது. அவ்வகையில் எழுத்துக்களைக் கணினி மூலம் வெளியிடப்படுகின்றது.

4. **அச்சுவகை**

இதழ்கள் தனிஅச்சு, வரிஅச்சு என்ற ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றுகின்றன. புதிய தலைமுறை நவீன கணினி அச்சுமுறைகளைத் தனது பதிப்பிற்காகப் பயன்படுத்துகின்றது.

எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும் முறையில், தனது எழுத்து வகையினைத் தேர்ந்தெடுத்து அச்சிடப்பட்டுள்ளது.

**பத்திகள் அமைத்தல்**

1.செய்திச் சுருக்கப் பத்தி
2. நேர்முகக் கூற்றுப் பத்தி
3. வருணனைப் பத்தி
4. மேற்கோள் பத்தி
5. பட்டியல் பத்தி

என ஐந்து வகையில் பகுக்கலாம். இவை அனைத்தின் உள்ளடக்கமும் புதிய தலைமுறை பத்திகளில் காணப்படுகின்றன. இப்பத்திகளை விளக்க மேல் பக்கத்திலும், வலப்பக்கத்திலும் படங்கள் அமைக்கப்படுகின்றன. படங்களோடு விளக்கம் இடம்பெறுவதால் வாசகருக்குச் சோர்வு ஏற்படாமல் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகின்றது.

**பக்க வடிவமைப்பு**

புதிய தலைமுறையில் படங்கள், வண்ண நிற பெரிய எழுத்தால் ஆன செய்திகள் இடம் பெறாத பக்கங்களே இல்லை எனலாம். பக்கங்களில் வெறும் செய்திகளாக மட்டுமே இல்லாமல் படங்களும் சமமாக இடம் பெற்றுள்ளன.

> **"வாசகர்களைக் கவரும் வண்ணம் ஒவ்வொரு பக்கமும்**
> **அமைந்திருத்தல் வேண்டும். ஒரு படம் ஆயிரம் சொற்களுக்கு இணையானது"** [11]

என்பதற்கேற்ப ஒவ்வொரு பக்கத்திலும் இடம்பெற வேண்டிய செய்திகளையும், உரிய படங்களையும் முடிவு செய்த பின்னர் ஒவ்வொரு பக்கத்தையும் அமைக்கும் வேலையை இதழாசிரியர் மேற்கொள்கின்றார்.

> **"செய்தித்தாளின் அளவு, எழுத்து வகைகள், விதவிதமான தலைப்புகள்,**
> **கருத்துப்படங்கள், பொருத்தமான படங்கள், பல்துறைச் செய்திகள், கதை,**
> **கட்டுரைகள், துணுக்குகள், கேலிச் சித்திரங்கள், விளம்பரங்கள்**
> **முதலியவற்றைப் பரவலாகவும், பொருத்தமான முறையில் அமைப்பது**
> **பக்க அமைப்பு அல்லது பக்கம் கட்டுதல் எனப்படும்"** [12]

இவ்வாறு புதிய தலைமுறையில் பக்க அமைப்பு வாசகரைப் படிக்கத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. புதிய தலைமுறை **26.5x19 செ.மீ** அளவு கொண்டது. இதில் படிக்கும் பகுதிகள் **22.5x15.9 செ.மீ** அளவில் இடம் பெற்றாலும் செய்திகளின் அளவு, பக்கத்திற்குப் பக்கம் மாறுபடும் தன்மையுடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

**இடை நிறுத்தங்கள்**

செய்திகள் தொடர்ந்து இடம்பெறாமல் இடையில் வேறு தகவல்களை அளித்து, அச்செய்தி நிறுத்திவருவது **'இடைநிறுத்தம்'** ஆகும். அச்செய்திகளுக்கு இடையிடையே இடம்பெறும் **தகவல்கள், படங்கள், விளம்பரங்கள், பெட்டிச் செய்திகள்** போன்றவை இடைநிறுத்தங்கள் ஆகும்.

கட்டுரை, தொடர் போன்றவற்றை ஒரே இதழில் முடிக்காமல் இரண்டு மூன்று இதழ்களுக்குப் பகிர்ந்துக் கொடுத்தல், ஒரு தொடரின் இடையிலுள்ள படங்கள் முதலியவை **'இடைநிறுத்தங்கள்'** எனப்படுகின்றன. புதியதலைமுறை வார இதழிலும் துணுக்குச் செய்திகள், படங்கள், விளம்பரங்கள், கவிதைகள், சிற்சில அரிய தகவல்கள் போன்றவை இடைநிறுத்தங்களாக இடம்பெறுகின்றன.

**இடநிரப்பிகள்**

பக்கங்களை அமைக்கும் போதும், பத்திகளை அமைக்கும் போதும் செய்திகளின் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக இடம்பெறுவது **'இடநிரப்பிகள்'** என்றழைக்கப்படுகிறது.

> **"தாளின் ஓரங்களில் சிறிய அளவுள்ள இடங்கள் வெற்றிடங்களாக மிஞ்சிவிடும். அத்தகைய இடங்களில் சிறிய செய்திகளை அமைத்து விடுவார்கள். இடத்தை நிரப்பப்ரபயன்படுவதால் இடம் நிரப்பிகள் என்று பெயர் பெறுகின்றன"** [13]

ஒரு இதழின் பத்திகளுக்கு இடையே வெற்றிடங்கள் இருந்தால் அந்த இடங்களில் ஏதாவது ஒரு செய்தியையோ, விளம்பரத்தையோ கொண்டு நிரப்புவர். இந்த நிரப்பிகள் முறையையே புதியதலைமுறை வார இதழும் பின்பற்றுகின்றது.

**தலையங்கம் (Editorial)**

ஒரு இதழின் தரத்தையும், தன்மையையும், முக்கியத்துவத்தையும் தீர்மானிப்பது தலையங்கம் என உறுதியாகக் கூறலாம். எல்லாவகையான இதழ்களுக்கும் தலையங்கம் அவசியமான ஒன்றாகும். ஒவ்வொரு இதழும் ஒரு குறிப்பிட்ட பக்கத்திலேயே தொடர்ந்து தலையங்கத்தினை வெளியிடுகின்றது.

> **"தலையங்கம் இல்லாத இதழ் முதுகெலும்பும்**
> **நாடும் இல்லாத மனிதனை ஒத்தது"** [14]

என்று ஆங்கில நாட்டு இதழாளர் **வால்ட்ராப்** கூறுகின்றார்.

இதழாசிரியர் தன்னுடைய கருத்தைச் சுதந்திரமாகத் தலையங்கத்தில் மட்டுமே வெளியிட முடியும். தலையங்கம் எழுதுவதற்குரிய முதன்மையான சிக்கல் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

> **"தலையங்கத்திற்குக் சுவரக்கூடிய தலைப்பு தர வேண்டும்.**
> **சரியாக அமையும் தலைப்பு தலையங்கத்தின்**
> **அகமதிப்பைக் கூட்டும்"** [15]

என்ற கருத்திற்கேற்ப தலையங்கத்திற்குரிய தலைப்புகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாகத் தலையங்கம் என்பது விரிவாக அல்லாமல் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் கொண்டிருக்க வேண்டும். திட்டவட்டமாகச் சொல்ல வேண்டிய செய்தியிருந்தால் மட்டும் தான் தலையங்கம் எழுதப்பட வேண்டும். ஒரு இதழின் முதன்மை பக்கத்தில் தலையங்கம் இடம் பெறுவதில் இன்றியமையாததாகும்.

**விளம்பரங்கள் (Advertisements)**

இதழ்களில் வெளிவரும் விளம்பரங்கள் நாட்டின் வாணிப வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன.விளம்பரங்களை வெளியிடாத இதழ்களே இல்லை.

**"எல்லா வகைத் தாள்களும் பலவகை விளம்பரங்களை வெளியிடுகின்றன "[16]**

என்பதற்கேற்ப புதிய தலைமுறையும் தனது இதழில் விளம்பரங்களை ஒரு பக்கம் விட்டு ஒரு பக்கம் என்ற முறையில் அமைத்துள்ளன.

**"விளம்பரம் இல்லையேல் பல பணிகள் முடங்கிவிடும்"[17]**

விளம்பரங்கள் தாள்களுக்கு உயிர்நாடி ஆகும். ஒரு குறிப்பிட்ட செய்தியைச் சம்பந்தப்பட்ட நபர்களின் நினைவில் நிறுத்துவதற்குக் கருவியாக அமைகின்றன.

**தொகுப்புரை**

இதழியல் என்பது மக்களுக்குத் தேவையான செய்திகளைக் கண்டுபிடித்து மனித வாழ்க்கையில் பல நிலைகளை அறிய உதவும் சாதனமாகும். இன்றைய உலகம் **"செய்தி உலகம்"** என்றழைக்கப்படுகிறது. தொடக்க நிலைகளில் வார, மாத இதழ்களாக வெளிவந்தவை உள்ளடக்க அடிப்படையில் வெளிவரத் தொடங்கின. மக்கள் வாழ்வோடு இணைந்து பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்வது பத்திரிகைத் துறை.

புதிய தலைமுறை இதழின் அட்டையின் அமைப்பு, அட்டையின் அளவு, தாளின் வண்ணம், தாளின் தரம் போன்ற செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. தாளின் உள்ளடக்கத்தில் இதழின் பெயர், இதழ் பற்றிய தகவல்கள், அட்டைப்படங்கள், தலையங்கம், இதழ் வெளிவந்த நாட்குறிப்பு குறித்த தகவல்கள் விளக்கப்பட்டுள்ளன.

புதிய தலைமுறை இதழின் உள்ளடக்கத்தில், உள்ளடக்கத்தின் அமைப்பு, அச்சமைப்பு, அச்செழுத்துக்கள், அளவு அச்சாக்கம், அச்சுவகை, அச்சுக்கோப்பு, பத்தி அமைத்தல், பக்க வடிவமைப்பு, இடைநிறுத்தம், இடநிரப்பிகள், கூறுகளின் பிரிவுகள், வைப்புமுறை, தொடக்கங்கள், தலைப்புப்பணி மற்றும் விளம்பரம் போன்ற கூறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

[1]. பாரதிதாசன் தமிழியக்கம், பா. எ. 108

[2]. முத்துராசன். கு. இதழியல் ஓர் அறிமுகம், ப. 37

[3]. அறிவியல் தமிழ் வளர்ச்சிப் போக்குகள் கருத்தரங்கு மலர், ப. 30

[4]. சாமி. அ. மா. தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, ப. 82

[5]. மேலது, ப. 82

[6]. முத்துராசன். கு. இதழியல் ஓர் அறிமுகம், ப. 22

[7]. மேலது, ப. 24

[8]. விநாயகமூர்த்தி. அ. பதிப்புப்பார்வைகள், ப. 154

[9]. ஈஸ்வரன். ச. சபாபதி. இரா. இதழியல் ஓர் அறிமுகம், ப. 41

[10]. மேலும், ப. 76

[11]. மேலும், ப. 24

[12]. அந்தோணி இராசு. ஆ. பி., இதழியல் ஓர் அறிமுகம், ப. 90

[13]. மேலும், ப.75

[14]. 14.சவரிமுத்து. சா, இதழியல் மக்கள் தகவலியல், ப. 127

[15]. குருசாமி. மா.பா. இதழியல் கலை, ப. 87

[16]. 16.அந்தோணி இராசு. ஆ. பி, இதழியல் ஓர் அறிமுகம், ப. 90

[17]. 17.குருசாமி.மா.பா, இதழியல் கலை, ப. 107